(4) The Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965.

* The Hon. Sri M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 and move—

" That the Bill* be taken into consideration. "

கனம் சபாநாயகர் அவர்களே, சற்று முன்பு நான் விளக்கியதை போல் சுப்ரீம் கோர்ட்டில் கொடுத்த ஒரு தீர்ப்பின் காரணமாகத் தான் இந்த மசோதாவைக் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 1957-க்கு முன்பு இருந்த சட்டத்திலே சில தர்ம ஸ்தாபனங்கள் செய்கின்ற கட்டளைகள் சீராக நிர்வாகம் செய்யப் படுவதற்காக அறநிலைய இலாகா மூலம் மேற்பார்வை செய்வதற்கும் விதி விதிக்கலாம் என்றும், நோடிபிகேஷன் செய்து அதைச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் சட்டம் இருந்தது. அதற்குப் பிறகு 1957-லே அந்தச் சட்டம் அப்படியே நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தின்கீழ் சில ஸ்தாபனங்கள் கட்டளைகள் நோடிபிகேஷன் செய்யப்பட்டு இந்த அறநிலையப் பாதுகாப்பு இலாகாவில் மேற்பார்வைக்கு வந்தது. அப்படி வரும்போது அறநிலையப் பாதுகாப்பு இலாகாவினர் நிர்வாக அதிகாரியைப் போடக்கூடிய ஒரு அதிகாரம் இருக்கிறது. இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால் திருவாரூர்க் கட்டளைக்காரர்கள் இது செல்லாது என்று ஹைகோர்ட்டுக்குப் போய், கடைசியில் சுப்ரீம் கோர்ட்டுக்கும் போனார்கள். சுப்ரீம் கோர்ட்டில் சட்டம் கூடாது என்று சொல்லவில்லை. நோடிபிகேஷன் செய்யக்கூடாது என்று சொல்லவில்லை. நோடிபிகேஷன் போடுவதற்கு முன்னால் அந்த தர்ம ஸ்தாபனத்தை ‘நாங்கள் மேற்பார்வை செய்யப் போகிறோம்; அதற்கு என்ன சமாதானம் சொல்லுகிறீர்கள்?’ என்று கேட்டு அதற்குப் பிறகு ஒப்புக்கொள்ளவில்லை என்றால் பிறகு நோடிபிகேஷன் போடலாம். அவர்கள் சமாதானம் கூற வேண்டிய நிமித்தம் இருக்கிறது. அது இதிலே நிறைவேறவில்லை. ஆகவே, கொடுக்கப்பட்ட நீதி சரியான நீதி என்று சொல்வதற்கில்லை. ‘நேச்சுரல் ஜஸ்டிஸ்’ இதிலே இல்லை என்றுதான் சுப்ரீம் கோர்ட் தள்ளி விட்டார்கள். அதனால் இங்கே விபரீத விளைவுகள் ஏற்படக் கூடும். தருமபுர ஆதீனத்தார் இந்தக் கட்டளைகளையெல்லாம் மேற்பார்வை பார்த்து வருகிறார்கள் இவையெல்லாம் திருப்திகரமாக இருக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம். மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு என்டோமென்ட் வைக்க வேண்டுமென்று சொல்லும்போது மடங்களைப் பற்றிச் சொல்ல மறந்து விட்டேன். மடங்கள் தாராளமாக என்டோமென்ட் வைக்கவேண்டும். தமிழைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. சில பேர் ஏதோ செய்கிறார்கள்; மறுக்கவில்லை. தங்களுடைய ஆதிக்கத்தில் இருக்கிற கட்டளைகளைப் பற்றி யாரும் கேட்கக்கூடாது. நிர்வாக அதிகாரி கூடப் போடக் கூடாது, எங்கள் இஷ்டம் போல்

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 23rd July 1965.

30th July 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

செய்வோம் என்று கூறும் நிலைமை இருக்கிறது. அந்த நிலைமைக்கு இடம் கொடுக்காத வகையில் சட்டம் செய்யப்பட்டது. அதன்படி நோடிபிகேஷன் செய்யப்பட்டது. சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு என்ன வென்றால், முதலிலே நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அதற்கு என்ன சமாதானம் சொல்கிறார்கள் என்று பார்த்து அதற்குப் பிறகு அரசாங்கம் உத்தரவு போடலாம். நோட்டீஸ் கொடுக்காவிட்டால் 'நேச்சுரல் ஜஸ்டிஸ்' இல்லை. அதற்கு இணக்க மாகத்தான் இந்த மசோதா வந்திருக்கிறது. இதிலே இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் தவறுதலாகப்போய்ப் பெரிய குழப்பம் ஏற்படும். அல்லாமலும் தங்கள் இஷ்டம் போல் தர்ம ஸ்தாபனங்களைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடும். அதைத் தவிர்க்க இது அவசரச் சட்டமாகப் பிரயோகம் செய்யப்பட்டது. இதுவரையில் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் என்று கருதப்படும். இதற்குப் பிறகும் நீடிக்க வேண்டுமென்றால் நோட்டீஸ் கொடுத்து இதை நீடிப்பது என்பதுதான் இந்த மசோதாவினுடைய நோக்கம். ஆகவே, இந்த மசோதாவைக் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இது பற்றி சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது என்று கனம் முதல மைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தத் தீர்ப்பு எப்போது வந்தது ? அதற்குப் பிறகு ஆர்டினன்ஸ் எப் போது வந்தது ? ஆர்டினன்ஸ் 17-ம் தேதி வெளியிடப்பட்டதாக கூறப்படுகிறது. அந்த நோத்திலே ஆர்டினன்ஸ் கொண்டு வர வேண்டிய அவசியம் இருந்ததா ? சட்டசபை ஆரம்பித்ததற்குப் பின் கொண்டுவர வாய்ப்பு இருந்ததா என்பதை அறிய விரும்பு கிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தத் தீர்ப்பு எந்தத் தேதி வந்தது என்று நினைவு இல்லை. இரண்டு மாதத்திற்கு முன்பு வந்தது. இதனால் ஏற்படக் கூடிய விளைவுகளைத் தவிர்க்க சட்டம் செய்ய வேண்டும். சட்டம் செய்வது என்றால் தாமதமாகலாம். ஆகவே, அவசரச் சட்டம் பிறப்பிப்பது என்று முடிவு செய்யப் பட்டது. அதற்கும் மத்திய அரசாங்க அனுமதி வேண்டியிருக் கிறது. அவர்கள் சில யோசனைகளை சொன்னார்கள். அந்த அளவிற்குத்தான் தாமதம் ஏற்பட்டது. அந்த மாதிரிச் செய்யாமல் இன்றைக்கு இந்த மசோதாவை இந்த மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொள்ளலாம் என்றாலும் இன்றைக்கே அந்தச் சட்டத்தை இந்த மன்றம் நிறைவேற்றி விடும் என்று எதிர் பார்ப்பதற்கில்லை.

பிசினஸ் அட்வைசரி கமிட்டி இருக்கிறது. இன்று வந்தாலும் இந்த பத்து நாட்களில் விபரீதம் ஏற்படலாம், 15 நாட்களில் விபரீதம் ஏற்படலாம். ஒரு நாள் கூட தாமதிக்கக் கூடாது. ஒரு நாள் கூட தவிர்க்கக் கூடிய வகையில் தாமதப்படுத்தக் கூடாது. இந்த மசோதாவை தயாரிக்கும்போது சட்ட நிபுணர்களுடன் கலந்துதான் செய்யப்பட்டது. ஒரு நாள் கூட தாமதிப்பது சரி

யல்ல. அதனால் விபரீதம் ஏற்படலாம் என்றுதான் இது அவசரச் சட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. இவ்வளவு நாட்களுக்குள் வரலாம் என்று வரம்பு இருக்கிறது. ஆகவே, சட்டசபை கூடுகிற வரை என்றில்லாமல் சபாநாயகர் அவர்களின் அனுமதி பெற்று கெசட்டில் பிரசுரித்து இந்த சபை தொடங்கிய நான்காவது நாள் இந்த மன்றத்திற்கு வந்திருக்கிறது.

MR. SPEAKER : The question is—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 6 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I move—

'That the Madras Hindu Religious and Charitable Endowments (Amendment) Bill, 1965 be passed'.

The motion was put and carried and the Bill was passed.

1-21 p.m. MR. SPEAKER : The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

VI.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE

A. Statutory Rules and Orders.

* 174. *Notification issued with G.O. Ms. No.* 1311, *Home, dated the* 9th *April* 1965, *directing that the tax payable in respect of lorry bearing registration No. MDJ* 1358 *belonging to the St. Mary's High School and Orphanage, Vellore, be fixed as Rs.* 180 *(Rupees one hundred and eighty only) per quarter, so long as the said lorry is used exclusively for the transport of materials, for the construction of buildings for the said educational institution and orphanage and for carrying foodstuffs to the orphanage from the market.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

* 175. *Notification issued with G.O. Ms. No.* 2023, *Home, dated the* 9th *June* 1965 *exempting from payment of tax leviable under the Madras Motor Vehicles Taxation Act*, 1931, *the vehicle bearing registration No. MDE* 8585 *belonging to the United Nations International Children's Emergency Fund and assigned to Sri Avanashilingam, Home Science College, Coimbatore.* [*Laid on the Table of the House under section* 11 (2) *of the Madras Motor Vehicles Taxation Act*, 1931 (*Madras Act III of* 1931).]

---

* Placed on the Table of the House on the 29th July 1965.